**உள்ளக பரீட்சை அறிவித்தல் !**

எனது இலக்கம்: PPSC/EX/2/2/1/2025

வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு,

வடமேல் மாகாண சபைகள் அலுவலக கட்டிடத் தொகுதி,

குருணாகல்.

2025.10.03.

வடமேல் மாகாண பிரதான செயலாளர்,

வடமேல் மாகாண ஆளுநரின் செயலாளர்,

வடமேல் மாகாணத்தில் உள்ள சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு,

**திறமை அடிப்படையில் வடமேல் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிஉயர் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை – 2025**

01. வடமேல் மாகாண சபை அரச சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகளுக்கும், 2015.01.16 ஆந் திகதிய வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள, வடமேல் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பினால் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதனகத்து மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும், கட்டுப்பட்டு, வடமேல் மாகாண சபை அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் உயர் வகுப்பில் நிலவுகின்ற வெற்றிடங்களில் 50% க்கு மேற்படாத எண்ணிக்கையில் தகைமை அடிப்படையில் பதவி உயர்வுக்கான போட்டிப் பரீட்சையை **2025 திசெம்பர்** மாதத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

02. 2025.03.25 ஆந் திகதிய மற்றும் 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் MN 7– 2025 ஆம் சம்பள வகுதிக்கு இப்பதவி உரித்தாகும் என்பதோடு, அதற்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 71,240/– 11 x 1,360/– 18 x 1,850/– 119,500 ஆன தொகையாகும்.

03. **மதிப்பீட்டு முறைமை :–**

வெற்றிடங்களில் 50% ஆன அளவிற்கு உரித்தான நியமனங்களை திறமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இதற்காக, வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவிற்குப் பதிலாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற உளச்சார்பு பரீட்சைக்குத் தோற்றி குறைந்தபட்சம் 40 புள்ளிகளைப் பெற்று சித்தியெய்திருத்தல் வேண்டும். எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்திய விண்ணப்பதாரர்களின் புள்ளிகள் குறிப்பிடப்படாத பெயர் பட்டியலொன்று, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால், வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவிற்கு வழங்கியதன் பின்னர், வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படுகின்ற சபையினால் சேவை மூப்புநிலை மற்றும் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுகின்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை ஒழுங்கிற்கு ஏற்ப முன்னுரிமைகள் தீர்மானிக்கப்படுகின்றது. மேற்கூறப்பட்ட விதத்தில் எழுத்துப் பரீட்சையில் குறைந்தபட்சம் 40 புள்ளிகள் அல்லது அதற்கு மேலான புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே அந்த குழுவால் புள்ளிகள் வழங்கப்படுவதற்காக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை சபையின் முன்னிலையில் தகைமைகளைப் பரீசித்துப் பார்க்கின்ற நேர்முகப் பரீட்சையொன்றுக்கு மீண்டும் அவ்விண்ணப்பதாரிகள் மீண்டும் தோற்றுதல் வேண்டும் என்பதோடு அந்நேர்முகப் பரீட்சையின் போது எந்தவொரு புள்ளிகளும் வழங்கப்பட மாட்டாது.

| | | |
|---|---|---|
| I. | உளச்சார்பு மற்றும் விடய ஆய்வு (எழுத்து) | 100 (காலம் 1மணித்தியாலம் 30 நிமிடங்கள்) |
| II. | சேவைமூப்பு நிலை | 60 |
| III. | அனுபவம் | 40 |
| | | 200 |

I. **உளச்சார்பு மற்றும் விடய ஆய்வு :- எழுத்துப் பரீட்சை ( காலம் 1 1/2 மணித்தியாலம் 100 புள்ளிகள்)**

இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படுகின்ற திகதியை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும். உளச்சார்பு மற்றும் விடய ஆய்வு ஆகிய எழுத்துப் பரீட்சை வினாப் பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

(அ). முதல் பகுதி **(40 புள்ளிகள்)**

எல்லா வினாக்களும் அலுவலக நிர்வாகத்துடன் தொடர்புடையதாக அமைந்துள்ளதோடு, அதில் பொது அறிவு, முடிவெடுக்கும் திறன், தர்க்க ரீதியாக தீர்வு காணல் மற்றும் அலுவலக நிர்வாகத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் சமர்ப்பிக்கப்படும். எல்லா வினாக்களுக்கும் பதிலளித்தல் வேண்டும்.

(ஆ). இரண்டாம் பகுதி **( 60 புள்ளிகள்)**

பரீட்சார்த்திகளுக்கு அலுவலக நிர்வாகத்தில் உள்ள விடய ஆய்வுப் பிரச்சினைகளுடன் தொர்புடைய பதில்களை வழங்க வேண்டும். இதன்போது ஒரு பந்தி அல்லது பல பந்திகளைக் கொண்டு இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

II. **சேவை மூப்புநிலை :-** மூப்புநிலைக்கு புள்ளிகள் வழங்கப்படுவது, உத்தியோகத்தர் ஒருவர் அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I இல் 05 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர், அடுத்துவருகின்ற முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கு ஒரு வருடத்திற்கு 06 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 60 புள்ளிகள் வரை வழக்கப்படும். இதன்போது, 06 மாதங்களுக்கு மேற்பட்ட ஆனால் ஒரு வருடத்திற்கு குறைவான சேவை காலத்திற்கு 03 புள்ளிகள் வீதம் வழங்கப்படுவதோடு, ஆறு மாதங்களுக்கு குறைவான சேவைக் காலத்திற்கு எந்தப் புள்ளிகளும் வழங்கப்படாது. 15 வருடங்களில் I ஆந் தரத்திற்கு பதவியுயர்வு கிடைக்கப்பெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கு மற்றும் 2013.04.02 ஆந் திகதிய புதிய சேவைப் பிரமாணத்தை நடைமுறைப்படுத்தப்படும் திகதி வரை II ஆந் தரத்திற்கு நியமனம் பெற்று 10 வருடங்களுக்கு மேற்பட்ட எல்லா உத்தியோகத்தருக்கும் II ஆந் தரத்தில் இருந்து மேலதிக வருடமொன்றிற்கு 03 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

III. **அனுபவம் :-** வடமேல் மாகாண சபை அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் I ஆந் தரத்தில் கண்காணிப்பு உத்தியோகத்தராக திருப்திகரமான ஒரு வருடத்திற்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 40 புள்ளிகள் வரை அனுபவத்திற்கான புள்ளிகள் வழங்கப்படும்.

**குறிப்பு :- வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பரீட்சிப்புக் குழுவினால் சேவை மூப்புநிலை மற்றும் அனுபவத்திற்கான புள்ளிகள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் சேவை மூப்புநிலை மற்றும் அனுபவம் தொடர்பில் வழங்கப்படுகின்ற புள்ளி அவ்வுத்தியோகத்தர்களின் சுயவிபரக் கோவையை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவார்கள். இதன்போது வேண்டுமென்றே தவறான தகவல்களை உள்ளடக்கியுள்ளதாக தெரியவருமானால் வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு கட்டுப்பட்டு விண்ணப்பதாரர்களுக்கு மற்றும் அவ்விண்ணப்பங்களைச் சான்றுப்படுத்திய திணைக்களத் தலைவர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். சுயவிபரக் கோவை மூலம் நிரூபிக்கப்படாத தகைமைகளுக்கு புள்ளி வழங்கப்பட மாட்டாது.**

04. இதற்காக நடாத்தப்படவுள்ள எழுத்துப் பரீட்சை 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் குருணாகல் நகரத்தில் நடாத்தப்படும். இந்தப் பரீட்சையை காலம் தாழ்த்துதல் அல்லது இரத்துச் செய்வதற்கு வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

05. **தகைமைகள் :-**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வடமேல் மாகாண சபை அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் I ஆந் தரத்தில் குறைந்தபட்சம் 05 வருட முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தராக இருத்தல். அத்திகதிக்கு அரச சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி எந்தவொரு ஒழுக்காற்று தண்டனையும் பெற்றிருக்காதிருத்தல். குறித்த திகதிக்கு உரிய வினைத்திறன் காண் தடைப்பரீட்சை பரீட்சையைப் பூர்த்தி செய்திருத்தல்.

06. **விண்ணப்பிக்கும் முறை :-**

(அ) விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு ஏற்ப அமைதல் வேண்டும் என்பதோடு, அது (A4) அளவுடைய கடதாசியின் இரு பக்கமும் பயன்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டு பரீட்சார்த்தியினால் தனது சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 01 தொடக்கம் 04 வரை முதல் பக்கத்திலும், 05 தொடக்கம் 09 வரை இரண்டாம் பக்கத்திலும், மீதமுள்ளதை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் தயாரித்தல் வேண்டும். அதற்குரித்தான தகவல்கள் தனது சொந்த கையெழுத்தில் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 09 இற்கு உரித்தாக குறிப்பிடப்பட்டுள்ள அனுபவத்தை நிரூபிப்பதற்கு உரிய கடிதங்களின சான்றுப்படுத்திய பிரதிகள், அனுபவத்தைக் காட்டுகின்ற ஒழுங்கிற்கு ஏற்ப விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் என்பதோடு, அதற்கு பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்களுக்கு புள்ளிகள் வழங்க கருத்திற் கொள்ளப்படாது. கடிதங்கள் மூலம் சான்றுப்படுத்தப்படும் சேவைக் காலத்திற்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும் என்பதோடு, அத்தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையின் மூலம் உறுப்படுத்திக் கொள்ளல். (ஆ) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் முழுமையான தகவல்களை வழங்காத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். (பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.)

(ஆ) எழுத்துப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகளுக்கு தான் சேவைக்கு இணைக்கப்பட்டுள்ள மொழி ஊடகத்தில் அல்லது ஏனைய அரசகரும மொழியின் மூலம் பரீட்சைக்கு தோற்ற முடியும். **விண்ணப்பங்களை தயாரித்தல் மற்றும் அதனை நிரப்ப வேண்டியது தான் எழுத்துப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மொழி மூலத்திலாகும்.**

விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றியமைக்க வாய்ப்பளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்களை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூல விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிமாக ஆங்கிலத்திலும் எழுதப்படல் வேண்டும்.

(இ) பரீட்சைக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தாம் சேவையாற்றுகின்ற திணைக்களத் தலைவர்/அமைச்சின் செயலாளர் மூலம் பதிவுத் தபாலில் 2025.10.24 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் **"செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு, மாகாண சபை அலுவலக கட்டிடத் தொகுதி, குருணாகல்"** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.விண்ணப்பங்களை அனுப்பும் போது, அவற்றினை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலலையில் **"திறமை அடிப்படையில் வடமேல் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிஉயர் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை – 2025"** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) உத்தியோகத்தர்களினால் நிரப்பப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களை தமது அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற திகதியிலே அலுவலக திகதி முத்திரை இடுவதற்கும் , அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணங்கள் மற்றும் விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 19 இல் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களத் தலைவரின் சான்றிதழை உறுதிப்படுத்தி, உறுதிப்படுத்தப்பட்ட திகதியுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு முன்னர் மேற்படி முகவரிக்கு கிடைக்கும் வகையில் அனுப்புவதற்கு திணைக்களத் தலைவர் / அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ) ஒரு கூட்டுத்தாபனம் அல்லது ஒரு நியாயதிக்க சபையில் சேவைக்காக தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ள/சேவைக்காக இரண்டாம் நிலைப்படுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பில், குறித்த அமைச்சின் செயலாளரினால் விண்ணப்பங்கள் சான்றுப்படுத்தப்பட்டு மேற்கூறப்பட்டவாறு அனுப்புதல் வேண்டும்.

(ஊ) குறிப்பிடப்பட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் தாமதமாகும் அல்லது தொலைந்து போன விண்ணப்பங்கள் தொடர்பில் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியைத் தவிர வேறு நபர்களுக்கு அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(எ) விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரி வகிக்கின்ற பதவி மற்றும் சேவை நிலையம், இதனுடன் தொடர்புடைய சகல நடவடிக்கைகளும் ஏற்புடையாகும் என்பதோடு, விண்ணப்பங்கள் அனுப்பியதன் பின்னர் அது குறித்த மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(ஏ) வடமேல் மாகாண சபை அரச சேவைக்கு உரித்தான இலக்கம் 06 என்பதால், உங்கள் வசதிக்காக அவ்விலக்கத்தை மாதிரி விண்ணப்பப்படிவத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

**07. பரீட்சைக் கட்டணம் :–**

பரீட்சைக் கட்டணம் ரூபா. 1,200/– ஆகும். இக்கட்டணத்தை வடமேல் மாகாண சபையின் வருமானத் தலைப்பு 2003–02–13 இற்கு வரவு வைக்கப்படும் வகையில் வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனும் ஒரு பிரதேச செயலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட வ.மே.மா.ச.நி./2 பற்றுச்சீட்டின் மேற்பகுதியினை மாத்திரம் விண்ணப்பப்படிவத்தில் குறித்த இடத்தில் ஒட்டும் வகையில் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுடையதாக இருக்கும்.)

எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படவோ அல்லது மற்றொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ அல்லது மேற்கொள்ளப்படமாட்டாது.

**08. பரீட்சைக்கு உள்வாங்குதல் :–**

(அ) எழுத்துப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்கு தோற்றுகின்ற பரீட்சார்த்தியொருவர் பரீட்சை மண்டபத்தில் அதன் மண்டபப் பொறுப்பாளருக்கு தமது ஒப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். தனது பரீட்சை அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டார்கள். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் முடிவே இறுதி முடிவாகும்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டவுடன் அது பற்றி தெரியப்படுத்தி அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்படும். அறிவித்தலில் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 தினங்கள் கடந்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாது விடின், அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்குகள் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். பரீட்சையின் பெயர், தங்களது முழுப் பெயர் மற்றும் முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய விபரங்களைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

(ஈ) எழுத்துப் பரீட்சையின் புள்ளி மற்றும் மூப்புநிலை மற்றும் அனுபவத்திற்காக வழங்கப்படுகின்ற புள்ளிகளின் மொத்த அளவின் படி திறமை ஒழுங்கிற்கு ஏற்ப தயாரிக்கப்படும் பெறுபேற்றுச் சான்றிதழை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவிடம் வழங்கப்படுகின்றது. பரீட்சைக்கு தோற்றுகின்ற சகல விண்ணப்பதாரிகளினதும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் தெரியப்படுத்தி அனுப்பி வைக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**<u>குறிப்பு:- பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிஉயர் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான தகைமை கொண்டவராகக் கருதப்பட மாட்டார்.</u>**

09. பரீட்சார்த்தி / பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை.
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திராதிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமான வகையில் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்பத்தினுள் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

10. **<u>போலியான தகவல்களை வழங்கியதற்கான தண்டனை :-</u>**

(அ) இந்தப் பரீட்சைக்கு உரித்தான விதிமுறைகளின் படி எவரேனும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து, பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது அதற்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தத் தன்மை இரத்துச் செய்ய முடியும்.

(ஆ) பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் போலியானது என தெரிந்து வேண்டுமென்றே சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தால், அவ்வாறில்லையெனில், ஏதேனும் முக்கியமான தகவலை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரை அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும்.

(இ) பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும். அப்பரீட்சை விதிமுறைகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் கட்டுப்பட வேண்டும்.

*11.* **<u>நியமனத்திற்காக தேர்ந்தெடுத்தல்</u>** :–

சேவை மூப்புநிலை, அனுபவம் மற்றும் எழுத்து பரீட்சையின் மூலம் பெற்ற மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையின் படி திறமை ஒழுங்கினை கண்டிப்பாக பின்பற்றப்பட்டு நிரப்பப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்படுவார்கள். (எழுத்துப் பாரீட்சைக்கு குறைந்தபட்சம் 40 புள்ளிகளை கட்டாயமாக பெறப்படுதல் வேண்டும். அவ்வாறு குறைந்தபட்ச புள்ளியான 40 இனைப் பெறாத விண்ணப்பதாரர்கள் இந்நியமனத்திற்கு தகுதியற்றவர்கள் ஆவார்கள்)

*12.* பரீட்சையில் சித்தியெய்கின்ற எவரேனும் ஒரு பரீட்சார்த்தி அந்நியமனம் வழங்கப்படும் சந்தர்ப்படும் அமுலில் இருக்கும் ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நியமனத்தைப் பெறுவதற்கு தகுதியானவர் எனக் கருதப்பட்டால் அல்லது திருப்திகரமான கடமை நடத்தை காரணமாக நியமனம் வழங்காதிருக்கும் உரிமை வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவிற்கு உண்டு.

*13.* ஏதேனும் வெற்றிட எண்ணிக்கை அல்லது வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்பாதிருக்க இங்கு விதிமுறைகள் தொகுக்கப்படாத விடயங்கள் தொடர்பில் முடிவுகளை எடுப்பதற்கும் வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

*14.* சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

**என்.எம்.ஜே. பிரனாந்து**
செயலாளர்
வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

## திறமை அடிப்படையில் வடமேல் மாகாண சபை அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிஉயர் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை – 2025

## COMPETITIVE EXAMINATION FOR PROMOTION TO THE SUPRA GRADE OF NORTH WESTERN PROVINCIAL MANAGEMENT SERVICE OFFICER'S SERVICE ON MERIT BASIS – 2025

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்
சிங்களம் –2, தமிழ் –3, ஆங்கிலம் –4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

நீங்கள் உள்ளடங்குவது எந்த மாகாண அரச சேவை என்பது பற்றி 6

01. 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :– ……………………………………………

1.2 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :– ……………………………………………

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் ( சிங்களத்தில் / தமிழில்) :–

……………………………………………

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :–

02. 2.1 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :– ……………………………………………

……………………………………………

(பரீட்சை அனுமதிப் பத்திரம் இந்த முகவரிக்கு அனுப்பப்படும்)

2.2 அலுவலக முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :– ……………………………………………

……………………………………………

2.3 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :– ……………………………………………

……………………………………………

2.4 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :– ……………………………………………

……………………………………………

2.5 தொலைபேசி இலக்கம் : –

2.6 WhatsApp இலக்கம் : –

2.7 E–mail : –

03. பிறந்த திகதி :– வருடம் மாதம் திகதி

04. பெண்/ ஆண் பால்நிலை :– ஆண் – 0 பெண் – 1

05. (அ) தற்போதைய சேவை நிலையத்தின் தலைவர், சேவை நிலையம் மற்றும் முகவரி :-

........................................................................................................................................................................

(ஆ) தற்போதைய பதவி மற்றும் பிரத்தியேகக் கோவை இலக்கம் ..........................................................................................

(இ) தங்களது பிரத்தியேகக் கோவை பேணப்பட்டு வருகின்ற அலுவலகம் மற்றும் நிறுவனத் தலைவர் உள்ளிட்டோரின் முகவரியை தெளிவாக குறிப்பிடவும் ..........................................................................................

06. (அ) வடமேல் மாகாண சபை சாதாரண எழுதுநர் சேவையில்/ தட்டச்சர் சேவை/ சுருக்கெழுத்தாளர் சேவை/ புத்தகக் காப்பாளர் சேவை/சிறாப்பர் சேவை/ பண்டகசாலைப் பொறுப்பாளர் சேவை/ முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு நியமனம் செய்யப்பட்ட திகதி :- ........................

(ஆ) I ஆம் வகுப்பிற்கான நியமனங்கள் முற்திகதியிடப்பட்டிருந்தால் அத்திகதி மற்றும் அதற்கு உரித்தான சுற்றறிக்கையைக் குறிப்பிடவும் :- ..........................................................................................

(இ) I ஆம் வகுப்பிற்கு நியமனம் செய்யப்பட்டதிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி திகதி வரையிலான சேவைக் காலம் :-

வவருடங்கள்:-.................... மாதங்கள்:- .......... திகதிகள்:-..............

07. விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதிக்கு வருடாந்த ஒருங்கிணைந்த சம்பளம்:- ...........................

08. 2020.08.10 ஆந் திகதி முதல் 2025.08.10 ஆந் திகதி வரை சம்பாதித்த சம்பள ஏற்றத் திகதிகள் மற்றும் வருடாந்த சம்பள படிநிலை :-

| | சம்பள ஏற்றத் திகதி | வருடாந்த சம்பள படிநிலை (ரூபா.) |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

09. வடமேல் மாகாண சபை சாதாரண எழுதுநர் சேவையில்/ தட்டச்சர் சேவை/ சுருக்கெழுத்தாளர் சேவை/ புத்தகக் காப்பாளர் சேவை/சிறாப்பர் சேவை/ பண்டகசாலைப் பொறுப்பாளர் சேவை/ வடமேல மாகாண சபை அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு இணைக்கப்பட்ட திகதியிலிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதி வரை அலுவலக கண்காணிப்பு தொடர்பான அனுபவம் குறித்த தகவல்கள் :- (இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனுபவத்தை சான்றுப்படுத்தும் கடிதங்களில் நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பப்படிவத்தில் ஒழுங்குமுறையே இணைக்கவும். உத்தியோகத்தர்களின் செயற்திறன் அறிக்கைகளின் முதற் பக்கங்களின் (I ஆந் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டதன் பின்னர்) சான்றளிக்கப்பட்ட பிரதிகளை இணைத்து வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். சகல கடிதங்களும் விண்ணப்பப்படிவத்தில் இணைத்திருத்தல் வேண்டும் என்பதோடு, பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களுக்கு புள்ளிகள் ஏதும் வழங்கப்படாது.)

| அமைச்சு/ திணைக்களம்/ அலுவலகம் | காலப்பகுதி | | உத்தியோகத்தர் வகித்த மேற்பார்வையாளர் பதவி | காலம் | | உறுதிப்படுத்தும் கடிதங்கள்/ இணைக்கப்பட்டுள்ளது /இல்லை என்பது பற்றி |
|---|---|---|---|---|---|---|
| | ஆந் திகதி முதல் | ஆந் திகதி வரை | | வருடம் | மாதம் | |
| | | | | | | |

10. கடந்த 05 வருடங்களினுள் நீங்கள் வெளிப்படுத்திய செயற்திறன் நிகழ்வுகளாக எதனைக் கருதுகின்றீர்கள்?

........................................................................................................................................................................................................

11. கடந்த 05 வருடங்களினுள் உங்களின் செயற்திறன் அறிக்கைகளில் மோசமான செயற்குறிப்புக்கள் ஏதேனும் அறிக்கையிடப்பட்டுள்ளதா?

........................................................................................................................................................................................................

அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடவும்:-........................................................................................................................

12. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் உடன்முன்னரான ஐந்து வருட காலத்தினுள் சகல சம்பள ஏற்றங்களையும் சம்பாதித்துள்ளீரா? ........................................................................................................

2020.08.10 ஆந் திகதிக்குப் பின்னர் சம்பாதிக்காக சம்பள ஏற்றங்களாயின், அவ்வாறு ஏற்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிடவும். ........................................................................................................................................................

13. கடந்த 05 வருடங்களினுள் ஒழுக்காற்றுச் சட்டத்தின் கீழ் உமக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா?

........................................................................................................................................................................................................

அவ்வாறாயின் அக்குற்றத்தின் அல்லது விதிக்கப்பட்டுள்ள தண்டனையின் தன்மை மற்றும் தண்டனை அளிக்கப்பட்ட திகதி என்பன பற்றிய விபரத்தைக் குறிப்பிடவும் ..................................................................................................

14. உங்களது சேவைக் காலத்தினுள் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அல்லது நேர்மையின்மை தொடர்பான செயற்பாடொன்றிற்கு அல்லது ஒழுக்கமற்ற விடயத்திற்கு இட்டுசென்ற வேறு தவறான செயற்பாடுகள் அல்லது தண்டனைகள் பெற்றுள்ளீரா?

........................................................................................................................................................................................................

அவ்வாறாயின் அத்தவறின் இயல்பு, வழங்கப்பட்ட தண்டணை மற்றும் தண்டனை வழங்கப்பட்ட திகதி என்பவற்றை விபரமாக குறிப்பிடவும்.

........................................................................................................................................................................................................

15. மேலே இலக்கம் 11 இல் குறிப்பிடப்பட்டுள்ள மோசமான குறிப்புகள் மற்றும் மேற்படி 13 மற்றும் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை பற்றிய உங்களது அவதானங்கள் ஏதும் இருக்கின்றவா?

........................................................................................................................................................................................................

16. வடமேல் மாகாண சபை அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் உதிஉயர் வகுப்பிற்கு பதவியுயர்வு எதிர்பார்ப்புக்களை அடைவதற்கு உங்களிடம் ஏதேனும் விசேட திறமைகள் இருப்பதாயின் அவற்றையும் குறிப்பிடுங்கள்
........................................................................................................................................................................................................

17. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

I. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் ........................................................
II. பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி ........................................................
III. செலுத்திய தொகை ........................................................

| |
|---|
| பற்றுச்சீட்டு கழராதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.) |

என்னால் அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்று இதன்மூலம் சான்றளிக்கிறேன். இங்கு வழங்கப்பட்டுள்ள எந்தவொரு தகவலும் தவறானது அல்லது போலியானது என தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் தெரியவருமிடத்து, என்னை தகுதியற்றவர் ஆக்குவதற்கும், நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து என்னை சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்கும் முடியும் என்பதை அறிவேன். மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்தும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் சான்றுரைக்கின்றேன்.

மேலே குறிப்பிடப்பட்ட சகல தகவல்களும் துல்லியமானது எனவும் உண்மையாகவும் அளிக்கப்பட்டுள்ளது என்பதனை அறிவித்து சான்றளிக்கிறேன். மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பாகவு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் சான்றுரைக்கின்றேன்.

..............................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

(திணைக்களத் தலைவரின் முன்னிலையில்))

திகதி :-………………………………

**குறிப்பு :- தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவருக்குப் பதிலாக ஒப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் முன்னிலையில் விண்ணப்பதாரியினால் ஒப்பமிடல் வேண்டும்.**

*18.* **கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :-**

**எனது அலுவலகத்தில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர் மற்றும் நான் தனிப்பட்ட வகையில் அறிந்துள்ள திரு/ திருமதி/ செல்வி .................................... ஆகிய இவர் ................................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பம் இட்டார் என சான்றுப்படுத்துகிறேன். மேலும் அவர் பரீட்சைக்கு குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் எனவும் அதற்கான பற்றுச்சீட்டனை ஒட்டப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.**

..............................................................................

**சான்றுப்படுத்துநரின் கையொப்பமும்**
**உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரையும்**

**திகதி** ..............................................................................
**பெயர்** ..............................................................................
**பதவிப் பெயர்** ..............................................................
**முகவரி** ..............................................................................

*19.* **நிறுவனத் தலைவரின் சான்றுரை :-**

உத்தியோகத்தரின் பிரத்தியேகக் கோவையில் I ஆந் தரத்திற்கு நியமிக்கப்பட்டதிலிருந்து காணப்படுகின்ற செயலாற்றுகையில் இருந்து பின்வரும் தகவல் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

| செயலாற்றுகை வருடம் | | உத்தியோகத்தர் வகித்த மேற்பார்வையாளர் பதவி | செயலாற்றுகை அறிக்கைக்கு ஏற்ப | |
|---|---|---|---|---|
| ஆந் திகதி முதல் | ஆந் திகதி வரை | | உறுதிப்படுத்தப்பட்டுள்ளது | உறுதிப்படுத்தப்படவில்லை |
| 2024/_/_ | 2025/_/_ | | | |
| 2023/_/_ | 2024/_/_ | | | |
| 2022_/_ | 2023_/_ | | | |
| 2021/_/_ | 2022/_/_ | | | |
| 2020/_/_ | 2021/_/_ | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2019/_/_ | 2020/_/_ | | | |
| 2018/_/_ | 2019/_/_ | | | |
| 2017/_/_ | 2018/_/_ | | | |
| 2016/_/_ | 2017/_/_ | | | |
| 2015/_/_ | 2016/_/_ | | | |
| 2014/_/_ | 2015/_/_ | | | |
| 2013/_/_ | 2014/_/_ | | | |
| 2012/_/_ | 2013/_/_ | | | |
| 2011/_/_ | 2012/_/_ | | | |
| 2010/_/_ | 2011/_/_ | | | |
| 2009/_/_ | 2010/_/_ | | | |
| 2008/_/_ | 2009/_/_ | | | |
| 2007/_/_ | 2008/_/_ | | | |
| 2006/_/_ | 2007/_/_ | | | |
| 2005/_/_ | 2006/_/_ | | | |
| 2004/_/_ | 2005/_/_ | | | |
| 2003/_/_ | 2004/_/_ | | | |
| 2002/_/_ | 2003/_/_ | | | |
| 2001/_/_ | 2002/_/_ | | | |
| 2000/–/– | 2001/_/_ | | | |
| –/–/– | –/–/– | | | |

இப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் திரு/திருமதி/ செல்வியின் ........................................................ சேவை அறிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டதாகவும், அசை சரியானவை எனவும் உத்தியோகத்தரின் அனுபவத்தை நிரூபிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடிதங்கள் என்னால் சான்றுப்படுத்தப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வறிவித்தலின் ஏற்பாடுகளுக்கு அமைய இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு சகல தகைமைகளையும் முழுமைப்படுத்தியுள்ளதாகவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன். அவரின் வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானதாக உள்ளதோடு அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை எனவும் எதிர்வரும் காலத்தில் அவ்வாறான நடவடிக்கைகள் எதுவும் எடுப்பதற்கு கருதுவதில்லை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

.......................................................................

நிறுவனத் தலைவரின் ஒப்பம்

திகதி: ..............................

பெயர் :– ........................................................................................................................

பதவிப் பெயர் :– ........................................................................................................

உத்தியோகபூர்வ பதவி முத்திரை :–

(பதவிப் பெயர் உத்தியோகபூர்வ முத்திரையினால் உறுப்படுத்தப்படல் வேண்டும்.)